**செ.வெ.எண்: 722** **நாள்: 15.11.2024**

# புதுக்கோட்டை மாவட்டம்

## சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2025ன் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது - மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 01.01.2025 ஆம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2025இன் **சிறப்பு முகாம்கள் 16.11.2024 (சனிக்கிழமை), 17.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), 23.11.2024 (சனிக்கிழமை), 24.11.2024 (ஞாயிற்றுக்கிழமை)** ஆகிய நாட்களில் காலை 9:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள **1561** வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெற உள்ளது. இம்முகாமில் 01.01.2025 அன்றோ அதற்கு முன்போ 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் (31.12.2006 முன்னர் வரை பிறந்தவர்கள்) மற்றும் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் புதியதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6-லும், நீக்கம் செய்ய படிவம் 7-லும், திருத்தம் மற்றும் இட மாற்றம் செய்ய படிவம் 8-லும், அதற்குரிய சான்றுகளுடன் விண்ணப்பிக்கலாம்.

இந்த சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தில் 17 வயதை பூர்த்தி அடைந்தவர்களும் (அதாவது 30.09.2007 வரை பிறந்தவர்கள்) 01.04.2025, 01.07.2025 மற்றும் 01.10.2025 ஆகிய காலாண்டு தேதிகளில் தகுதி நாளாக கொண்டு 18 வயதை பூர்த்தி அடையும் நபர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு படிவம் 6ல் விண்ணப்பிக்கலாம். இவர்களின் மனுக்கள் அந்தந்த காலாண்டில் பரிசீலித்து முடிவு செய்யப்படும். வாக்காளர்களுக்கு தேவையான படிவங்கள் அந்தந்த பகுதிகளிலுள்ள வாக்குச்சாவடி மையங்களிலும், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களிலும், வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களிலும், மாநகராட்சி மற்றும் நகராட்சி அலுவலகங்களிலும் **28.11.2024** முடிய அனைத்து அலுவலக வேலை நாட்களிலும் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் voters.eci.gov.in என்ற இணையதள முகவரியிலும், Voter Helpline App என்ற கைப்பேசி செயலிலும் விண்ணப்பம் செய்யலாம்.

மேலும், வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்ப்பதற்கு வயது ஆதாரத்திற்காக பிறப்புச் சான்றிதழ், பள்ளி மதிப்பெண் சான்றிதழ், இந்திய கடவுச்சீட்டு, PAN அட்டை, ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை இவற்றில் ஏதேனும் ஒரு ஆவணங்கள் மற்றும் இருப்பிடத்தின் ஆதாரத்திற்காக தண்ணீர் / மின் கட்டணம் / சமையல் எரிவாயு ரசீது, கடவுச்சீட்டு, ஆதார் அட்டை, வங்கி / அஞ்சல் அலுவலக கணக்கு புத்தகம், பதிவு செய்யப்பட்ட வாடகை குத்தகைப் பத்திரம் இவைகளை பயன்படுத்தி புதிய வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்துக் கொள்ளலாம்.

இந்த சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2025 தொடர்பாக நடைபெறும் சிறப்பு முகாம்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் மற்றும் நீக்குதல் போன்ற பணிகளை வாக்காளர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு புதுக்கோட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai | PRO PDKT | @PRO_Pudukkottai | Pro.Pudukkottai